සමාජ සවිබලගැන්වීම් හා සුබසාධන අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT AND

දිවිනැගුම සංවර්ධන දෙපාර්තමේන්තුව
வாழ்வின்எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Divineguma Development**

1වන අධියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල.
1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல
1st 4th floor, **Sethsiripaya ,Battaramulla**

මගේ අංකය
எனது இல
My No
DDD/HO/04/CIRCULAR 2017

ඔබේ අංකය
உமது இல
Your No

දිනය
திகதி
Date
2017.02.15

## வாழ்வின் எழுச்சி சுற்றறிக்கை இலக்கம் :- 2017/03

சகல மாவட்டச் செயலாளர்கள் / மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளர் தலைமையதிபதிகள்
சகல மாவட்ட வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளர்கள்.

### சமூக வலுவூட்டல் மற்றும் கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டம் - 2017
### சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களை வலுவூட்டும் வேலைத்திட்டம்

2017ம் ஆண்டினை வறுமையினை ஒழிக்கும் ஆண்டாக பிரகடனப்படுத்தியதுள்ளதுடன் அதன் பிரகாரம் அரசாங்கத்தினால் “நிலைபேரான அபிவிருத்திப் பணி” பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலைபேரான அபிவிருத்தி இலக்கினை அடைந்து கொள்ளும் பொருட்டு அதனோடு இணைந்ததாக வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தினால் சமுர்த்தி பயனாளிகளை வலுவூட்டுவதனை அடிப்படைக் குறிக்கோளாக கொண்டு 2017ம் ஆண்டில் “சமுர்த்தி பயனாளிகளை வலுவூட்டும் வேலைத் திட்டங்களை” செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

02. இதன் கீழ் ஒவ்வொரு மாவட்டத்தினாலும் 2017ம் ஆண்டிற்குள் சரியாக வலுவூட்டக் கூடிய பயனாளிக் குடும்பங்களின் பொருட்டு (ஏலவே DDD/HO/04/ACTION PLAN -2017 என்ற இலக்கமும் 2017-01-25ம் திகதியிடப்பட்ட கடிதத்தின் பந்தி இலக்கம் 04 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏதொஒரு வருமான மட்டத்திலுள்ள வலுவூட்டக்கூடிய குடும்பங்கள்) இந்த வேலைத்திட்டத்தினை செயற்படுத்தல் வேண்டும் என விசேடமாகக் குறிப்பிடுகின்றேன்.

03. இதற்கமைய வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்கள் சமுதாய அடிப்படை அமைப்புக்கள், வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் குறித்த தொழில்நுட்ப உதவிச் சேவைகள் வழங்கும் ஏனைய அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் கூட்டிணைந்ததாக மிகக் கூடிய அபிவிருத்தி திறமைகளுடனான வாழ்வாதார கருத்திட்டங்களை இனம்கண்டு பயனாளிக்குடும்பங்களை வலுவூட்டும் பொருட்டு கருத்திட்டங்களை திட்டமிடல் வேண்டும்.

KUGAN/D

| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් / மேலதிக பணிப்பாளர்தலைமையதிபதி / Additional Director General | අධ්‍යක්ෂ )පාලන( / பணிப்பாளர் (நிர்வாகம்) / Director (Administration) | කාර්යාලය / அலுவலகம் / Office |
|---|---|---|---|---|
| Tel- | 011-2873802/2872202 | 011-2871672 | 011-2873799 | 011-2887280 |
| Fax - | 011-2889002 | 011-2887280 | 011-2873996 | **011- 2887722**(Hotline) |
| E-mail- | dg@divineguma.gov.lk | adg@divineguma.gov.lk | diradmin@divineguma.gov.lk | |

**04. சமுர்த்தி மக்களை வலுவூட்டுவதற்கு செற்படுத்தவேண்டிய கருத்திட்டங்கள்**

அதன் பிரகாரம் கீழுள்ள பிரிவுகளின் கீழ் குறிப்பிடப்படுகின்ற கருத்திட்டங்கள் அல்லது மேற்சொல்லப்பட்ட பிரிவுகளுக்குரிய எந்தவொரு வெற்றிகரமான கருத்திட்டம் ஒன்றினை செயற்படுத்துவதற்கு அதன் பிரகாரம் உங்களுக்கு ஆலோசனைகளை வழங்குகின்றேன்.

**1) விவசாய அபிவிருத்தி வேலைத்திட்டம்**

- விவசாயப் பயிர்கள் சார்ந்த பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளின் மேம்பாடு
- வெட்டுமலர்கள் மற்றும் அலங்காரத் தாவரங்களைப் பயிரிடல்
- மேலதிகப் பயிர்களின் பயிர்ச்செய்கையும் விசேட விவசாய கருத்திட்டங்களும் (உ+மாக வெணிலா போன்றவை)
- காளான் பயிர்ச்செய்கை, விதை உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கை
- ½ ஏக்கருக்கு மேற்பட்ட கீரை வகைகள் / கிழங்கு வகைகளின் பயிர்ச்செய்கை
- பெருந்தோட்டப்பயிர்கள் உள்ளட்ங்கிய பிற ஏற்றுமதிப்பயிர்கள்
- சந்தையினை இலக்காகக் கொண்ட கூட்டு விவசாயகருத்திட்டம்
- மேலே குறிப்பிடப்பட்ட பயிர்களுக்கு மேலதிகமாக கூடிய சந்தைப் பெறுமதியினையுடைய பயிர்களையும் இதன் கீழ் பயிரிடுவதற்கு விவசாயிகளை ஊக்குவித்தல் வேண்டும்.

**2. கால்நடை வளர்ப்பு வேலைத்திட்டம்**

- ❖ திரவப் பால் உற்பத்தியினை அதிகரிக்கச் செய்தல்.
- ❖ மாட்டுத் தொழுவங்களை நிர்மாணித்தலும் திருத்தஞ் செய்தலும்
- ❖ முட்டை உற்பத்திக் கருத்திட்டம்
- ❖ ஏனைய கால்நடை வளர்ப்புக் கருத்திட்டங்கள் (உ+மாக ஆடு வளர்ப்பு போன்றவை)

**3. மீன்பிடிக் கைத்தொழில் அபிவிருத்தி**

- ❖ உணவுக்காக குளங்களில் மீன் வளர்த்தல்
- ❖ அலங்கார மீன்கள் மற்றும் கடற் தாவர உற்பத்தி
- ❖ கருவாடு, மாசிக் கருவாடு ஜாடியிடல் போன்ற பெறுமதி சேர்க்கப்பட்ட மீன் உற்பத்திகளின் மேம்படுத்தல்கள்
- ❖ சிறிய மீன்பிடிக் கைத்தொழிலைக் கட்டியெழுப்புதல்

**4. சிறுகைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி வேலைத்திட்டம்**

- ❖ சிறியளவிலான அரைக்கும் ஆலைகளை அரம்பித்தல்
- ❖ கையடக்கத் தொலைபேசி திருத்துதல் மற்றும் தொடர்பாடல் நிலையங்களை ஆரம்பித்தல்
- ❖ பனை, தென்னை, கித்துள் சார்ந்த உற்பத்திகள்
- ❖ களிமண் சார்ந்த உற்பத்திகள்
- ❖ இலகு பொறிக்கைத்தொழில்கள் (கம்மாலை / ஒட்டுத் தொழில் போன்ற கைத்தொழில்கள்)
- ❖ பிரதான உற்பத்திக் கைத்தொழில்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்தல்.
- ❖ ஓட்டோமொபைல் சேவைகள் ( மோட்டார் இயந்திரக் கைத்தொழில், டின்கரின் வேலை, தகரவேலை, நிறம் பூசுதல் மோட்டார் இயந்திரம் திருத்துதல், சேவை நிலையங்கள், குஷன் இருக்கை வேலைத்தளங்கள்)

➢ வலுவூட்டக்கூடிய பயனாளிக் குடுபங்களை சரியாக இனம் காணக்கூடியதாக இருப்பின் வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவக்கூடிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கும் கவனத்தினைச் செலுத்தமுடியும்.

**தொழிலை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிப் பாடநெறி வேலைத்திட்டங்கள்**

சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களில் பாடசாலைக் கல்வியினை முடித்துவிட்டு தொழிற்படையில் சேருகின்ற 18-35 இற்கு இடைப்பட்ட வயதினையுடைய இளைஞர் யுவதிகளை இலக்காகக் கொண்டு இந்த வேலைத்திட்டத்தினை செயற்படுத்தமுடியும் என்பதுடன் ஒருநபரை நேரடியாக தொழில் ஒன்றை இலக்காகக் கொண்ட தொழிற்பயிற்சியில் ஈடுபடச் செய்வதனூடாக அந்த சமுர்த்திப் பயனாளிக் குடும்பத்தையே வலுவூட்ட முடியும் என்பதனை விசேடமாக சுட்டிக் காட்டுகின்றேன்.

அதன் பிரகாரம் கீழ் குறிப்பிடப்படும் தொழிற்பயிற்சி நிலையங்கள் அல்லது உங்களது பிரதேசத்திலுள்ள பிற அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க / தனியார் தொழிற் பயிற்சி நிறுவனங்களின் உதவியினைப் பெற்றுக்கொண்டு வேலைத்திட்டத்தினை செயற்படுத்துதல் வேண்டும்.

| தொ.இல | நிறுவனம் | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| I. | இலங்கை தொழிற் பயிற்சிஅதிகார சபை, 354/2 4ம் மாடி நிபுனத்தா பியஸ எல்விட்டிகல மாவத்தை, நாரஹேன்பிட்டிய, கொழும்பு 05 | 011-2596516<br>011-2581904 |
| II. | தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை வெலிக்கடை, ராஜகிரிய | 011-2876386<br>011-2887827 |
| III. | மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம், 9ம் மாடி செத்சிரிபாய 2ம் கட்டம் பத்தரமுல்ல | 011-2187131<br>011-2186022<br>011-2186023 |
| IV. | இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் 78, காலிவீதி கொழும்பு 03 | 011-2382201<br>011-2382212 |
| V. | சிறுதொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பணியகம், இளைஞர் விவகார அமைச்சு 420, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07 | 011-2669240<br>011-2665292 |
| VI. | கைத்தொழில் அபிவிருத்திச் சபை 615 காலிவீதி கட்டுபெத்தை, மொரட்டுவை | 011-2605278 |
| VII. | இலங்கை ஜேர்மன் கைத்தொழில் பயிற்சி நிறுவனம், இலக்கம் 582, காலிவீதி, கல்கிஸ்ஸை | 011-2605625<br>011-2623490<br>011-2638686 |
| VIII. | தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம், இலக்கம் 557 ஒல்கொட் மாவத்தை கொழும்பு 10 | 011-3137290<br>011-2431288 |
| IX. | நிர்மாண பயிற்சிகள் மற்றும் அபிவிருத்தி நிறுவனம் இலக்கம் 123 சௌசிரிபாய, விஜேராம மாவத்தை, கொழும்பு 07 | 011-2686092<br>011-2686236 |

**செயற்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள பாடநெறிக்கான உதாரணங்கள்**

1. ஹோட்டல் துறையில் டிப்ளோமா பயிற்சி
2. மெஷின் செய்முறைப் பயிற்சி
3. பாரஊர்தி சாரதிப் பயிற்சி
4. மோட்டார் தொழில்நுட்பவியலாளர்கள்
5. மின்சார மற்றும் இலக்ட்ரோனிக் பாடநெறிகள்

05. பொதுவான ஆலோசனைகள்

1. கருத்திட்டம் ஒன்றின் பொருட்டு இனம்காணப்படுகின்ற குடும்ப அலகு இக் கருத்திட்டம்/கருத்திட்டங்கள் காரணமாக இவ்வாண்டின் இறுதியில் போற்றக் கூடிய அதிக வருமான மட்டத்திற்கு வந்து பொருளாதார ரீதியாக வலுவூட்டப்பட்ட குடும்பம் ஒன்றாக பெயரிடுவதற்குறிய அடிப்படை உள்ளதா என்ற சாத்திய வளத்தினை சிறப்பாக பரீட்சித்துப் பார்த்து கருத்திட்டச் செயற்பாடுகளை முன்னேற்றச் செய்வது அத்தியவசியமானதாகும்.

2. DDD/HO/04/ACTION PLAN-2017 என்ற இலக்கமும் 2017-01-17ம் திகதியிடப்பட்டதுமான கடிதத்துடன் தங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தினைப் பயன்படுத்திகொண்டோ அல்லது தங்களால் தயாரித்துக் கொள்ளப்பட்ட படிவத்திற்கமைய கருத்திட்ட அறிக்கையினைத் தயாரித்தல் வேண்டும். கிராமிய சமுர்த்திச் சங்கங்கள் செயற்பாடுள்ளதாக இருப்பின் இனம்காணப்படுகின்ற கருத்திட்டத்தினை இச் சமுர்த்தி சங்கத்தில் மீளாய்வுக்குட்படுத்தி அங்கீகரித்தல் வேண்டும். மேலும் குறித்த நேரொத்த நிறுவனங்களின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் இணக்கப்பாட்டினையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும். வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வலயமுகாமையாளர், கருத்திட்ட முகாமையாளர்கள் சிபார்சுடன் தலைமையக முகாமையாளருக்கு அவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.

3. தலைமையக முகாமையாளர்களால் குறித்த கருத்திட்ட அறிக்கையின் பொருட்டு தனது சிபார்சுடன் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட்டிருப்பின் அதன் இனக்கப்பாட்டினையும் பெற்றுக் கொண்டு அதன் பின்னர் பிரதேச செயலாளரின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

4. ஆகக் குறைந்தது 40% கான பயனாளிப் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் உழைப்பு, மூலப் பொருட்கள், அல்லது பிரிதொருபங்களிப்பொன்றாகவும் இருக்கலாம்.

5. பிரதேச செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்ட பிரேரணை நிதி ஒதுக்கீட்டினைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு மாவட்ட வாழ்வின் எழுச்சி மேலதிகப் பணிப்பாளர் தலைமையதிபதி / மாவட்ட லாழ்லின் எழுச்சி பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

6. மாவட்ட வாழ்வின் எழுச்சி மேலதிகப் பணிப்பாளர் தலைமையதிபதி / மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளரால் தனது நிதி ஒதுக்கீடு எல்லைக்குட்பட்டதாக சரியாக இனங்காணப்பட்ட வலுவூட்டக்கூடிய அங்கீகரித்த கருத்திட்டங்களின் பொருட்டு இணைப்பு 01 இன் மூலம் பணிப்பாளர் தலைமையதிபதியிடம் கட்டுநிதி கோரல் வேண்டும்.

7. கருத்திட்டத்தினை ஆரம்பித்தல், தொடர்ச்சியாக பராமரித்துக் செல்லல், பயனாளியின் பங்களிப்பினை பெற்றுக் கொள்வதனை முறையான பிரகாரம் மேற்கொள்வதாக பயனாளிகளிடம் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடல் வேண்டும். பிரதேச செயலாளர், அல்லது அவருக்குப் பதிலாக அதிகாரமளிக்கப்படுகின்ற வாழ்வின் எழுச்சி தலைமையக முகாமையாளர், பயனாளிகளுடன் ஒப்பந்தம் ஒன்றில் கைசாத்திட வேண்டியது அத்தியாவசிமானதாகும். (இதன் பொருட்டு மாதிரிப் படிவம் இணைப்பு 02 இன் மூலம் காட்டப்பட்டுள்ளது.)

8. பயனாளிப் பங்களிப்பின் பொருட்டு வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி மூலம் வாழ்வாதார, சுழற்சிக் கடனை வழங்குவதனை ஒருங்கிணைப்பு செய்ய வேண்டியதுடன் அதன் பொருட்டு அந்த வங்கிகளின் சட்டதிட்டங்களுக்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

9. தொழிற் பயற்சிப் பாடநெறிகள் தவிர்ந்த ஏனைய பிரிவுகளின் கருத்திட்டங்களின் பொருட்டு தேவைப்படும் விடயத்துடன் இணைந்த பயற்சி வேலைத்திட்டங்களை வழங்க வேண்டியேற்பட்டால் முறையான திட்டமிடல் ஒன்றினை சமர்ப்பித்து பணிப்பாளர் தலைமையதிபதியின் அங்கீகாரத்தினை பெறல் வேண்டும்.

10. இக் கருத்திட்டங்களை செயற்படுத்தும் போது அரசாங்கத்தின் அங்கீகரித்த பெறுகை முறைகள், நிதிப்பிரமானம், இச்சுற்றறிக்கை ஆலோசணைகள் மற்றும் உறிய பிற சுற்றறிக்கை ஆலோசணைகளைப் பின்பற்றி செயற்படுத்தல் வேண்டும். அத்துடன் விலை மனுக்களையும் கவனத்திற் கொண்டு குறித்த நேரொத்த நிறுவனங்களின் சிபாரிசினைப் பெற்றுக் கொண்டு கொடுப்பனவுகளை மேற்கொள்வது அத்தியாவசிமானதாகும்.

11. சகல கருத்திட்டங்களின் பொருட்டு மேற்கொள்ள வேண்டிய கொடுப்பனவுகளை 2017.12.15ம் திகதிக்கு முன்னர் முடிப்பதற்கு ஏற்றவாறு கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும். காலத்திற்கேற்ப ஆரம்பிக்கவேண்டிய கருத்திட்டங்கள் தவிர்ந்த (உ+மாக விவசாயம்) ஏனைய கருத்திட்டங்களை மிக விரைவில் ஆரம்பிப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

12. கருத்திட்டங்களை இனங்காண்பது மார்ச் 15ம் திகதிக்கு முன்னர் முடிக்கப்படல் வேண்டும்.

13. மாவட்ட வாழ்வின் எழுச்சி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி / மாவட்ட வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளரால் தனது மாவட்டத்தில் செயற்படுத்த வேண்டிய வாழ்வாதார கருத்திட்ட பிரேரணைகள் தொடர்பில் சகல கண்காணிப்புகளையும் மேற்கொள்ளல் வேண்டும். மாதாந்தம் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்து மிகப் பயனுள்ள கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதுடன் உங்களது மாவட்டத்தின் குறிப்பிட்ட ''நிலைபேரான அபிவிருத்தி இலக்கினை'' அடையும் பொருட்டு அடிக்கடி கவனத்தினைச் செலுத்துவதனை இத்துடன் சுட்டிக்காட்டுகின்றேன்.

**06. கால வரையறை**

| தொடர் இலக்கம் | செயற்பாடுகள் | திகதி |
|---|---|---|
| 1. | சுற்றறிக்கைகளை வெளியிடுவதும் உத்தியோகத்தர்களை விளக்கமளிப்பதும் | 2017.02.28ம் திகதிக்கு முன்னர் |
| 2. | கிராமிய மட்டத்தில் சகல பிரிவினர்களுடன் கூட்டாக கருத்திட்டங்களை இணங்கானுதல் / கருத்திட்டங்களை திட்டமிடுதல் (கருத்திட்ட அறிக்கையினைத் தயாரித்தல் ) மற்றும் குறித்த சிபாரிசுகளை சமர்ப்பித்தல் | 2017.03.15 க்கு முன்னர் |
| 3. | கருத்திட்டங்களை அங்கீகரித்துக் கொள்ளல் | 2017.03.25 இற்கு முன்னர் |
| 4. | கட்டுநிதியினைச் கோருதல் | 2017.03.25ம் திகதியிலிருந்து |
| 5. | கருத்திட்டத்தினை ஆரம்பித்தல் | 2017.03.25ம் திகதியிலிருந்து |
| | முன்னேற்றத்தினை அறிக்கையிடல் | தொடர்ச்சியாக |

1. கருத்திட்ட கண்கானிப்பு மற்றும் பின்பணி தொடராய்வு செய்யும் முறைகளை நீங்களே தயாரித்துக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதுடன் பிரதேச மட்டத்திற்குத் தேவையான ஆலோசணைகளை வழங்குவது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் முன்னேற்ற மீளாய்வு ஒன்றினை மேற்கொள்ள வேண்டியதுடன் தேசிய மட்டத்தில் முன்னேற்ற மிளாய்வுக் கூட்டத்தின் பொருட்டு கலந்து கொள்வதும் அத்தியாவசியமானதாகும்.

2. இங்கு சமுதாய அடிப்படை அமைப்பும் கருத்திட்ட கண்கானிப்பின் பொருட்டு கலந்து கொள்ளச் செய்ய வேண்டியதுடன் சமூக கணக்காய்வின் பொருட்டு தேவையான சூழல் ஒன்றினை உருவாக்க வேண்டும்.

3. இத்துடன் உள்ள இணைப்பு 01ன் மூலம் மாதாந்த முன்னேற்றத்தினை அடுத்துவரும் மாதத்தின் 02ம் திகதிக்கு முன்னர் மாவட்ட வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளரால் இத் திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும். (Jeevonopaya@gmai.com, divinegumalh@yahoo.com) தொலைநகல் இலக்கம் 0112872253, 0112872201)

4. தேவைப்படும் எச்சந்தர்ப்பத்திலும் பெற்றுக்கொள்ளக் கூடியவாறு கருத்திட்டத் தரவுகள், தகவல்கள் மற்றும் புகைப்படங்களைத் தயாரித்து வைத்துக் கொள்ளல் வேண்டும்.

5. இந்த வேலைத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்கள் தொடர்பான தகவல்களை வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திட்ட (e-divineguma Project) இல் உள்ள கருத்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களின் முகாமைத்துவ மொடியூலில் (Project and Programme management module) உட்படுத்துவதற்கும் முன்னேற்றத்தினை உறிய பிரகாரம் குறித்த தினத்திலேயே முறைமைப்படுத்தவும். கருத்திட்ட முகாமையாளர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

6. தொழிலை இலக்காகக் கொண்ட தொழில் பயிற்சி வேலைத்திட்டத்திற்கமைய பயனாளியை தொழிலிலீடுபடுத்தும் வரை மற்றும் பெற்றுக் கொண்ட கடன் தொகையினைச் செலுத்தி முடிக்கும் வரை சமுதாய அடிப்படை அமைப்புக்கள் மற்றும் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் தொடர்ச்சியாக பின்பணி தொடர் ஆய்வுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

**8. நிதி ஒதுக்கீட்டினை விடுவித்தல்**

ஒரு பயனாளிக் கருத்திட்டம் ஒன்றிற்காக அங்கீகரிக்கக்கூடிய ஆகக் கூடிய திணைக்கள பங்களிப்பானது ரூபா 45000/= ஆகும் என்பதுடன் தங்களது மாவட்டத்திற்கு ஒதுக்கப்படுகின்ற நிதி ஒதுக்கீட்டின் அளவினை இத்துடன் தங்களுக்கு அறிவித்து அனுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அங்கீகரித்த திறைசேறி நிதி ஒதுக்கீட்டின் அளவு, மற்றும் வாழ்வதார சுழற்சிக் கடன் நிதியத்தினை பயன்படுத்திக் கொண்டு தங்களது மாவட்டத்திற்குள் சரியாக வலுவூட்டப்பட வேண்டிய பயனாளிகளின் அளவு அல்லது அதற்கும் கூடுதலான அளவில் **“நிலைபேறான அபிவிருத்தி இலக்கை”** அடைந்து கொள்வது சகல உத்தியோகத்தர்களினதும் கடமைப் பொறுப்பாகும்.

**9. வாழ்வாதார சுழற்சி நிதியம்**

1. வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் பொருட்டு வழங்கப்படுகின்ற நேரடி நிதி ஒதுக்கீடுகள் போதுமாகாத சந்தர்ப்பத்தில் இந்த நிதியத்தின் மூலம் கடன் வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். மேலும் அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கருத்திட்டங்களுக்க சலுகைகளை வழங்குவதற்கான வாய்ப்புக்கள் கிடைக்காது இருப்பினும் கட்டாயமாக கருத்திட்டங்களில் ஈடுபடுத்தப்பட வேண்டிய பயனாளிக்கு சுழற்சி நிதியததின் மூம் கடனை வழங்குவதற்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

2. கருத்திட்டத்தின் பொருட்டு வழங்கப்படும் வாழ்வாதார சுழற்சி நிதியமானது கருத்திட்டத்தின் தன்மை அளவு மற்றும் தேவைகளுக்கேற்ப மீள அறவீட்டுக் கொள்வதற்கு உயர்ந்தபட்சமானது 03 மாத காலத்திற்குட்பட்டதான சலுகைக் காலம் ஒன்றினை வழங்க முடியும். தவணையடிப்படையில் மொத்தத் தொகையும் இந்த நிதியதின் செயற்பாட்டிலுள்ள வட்டி வீதத்தினடிப்படையில் மீள அறவீட்டுக் கொள்ள்ப்படவேண்டியதுடன் அறவிடப்படுகின்ற உயர்ந்தபட்ச காலமானது 36 மாதங்களுக்கு வரையறுக்கப்படல் வேண்டும்.

**10. நிருவாகச் செலவுகள்**

1. இந்த வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற அரசாங்கத்தின் செலவிலிருந்து 2.0% த்திற்கானதை நிருவாகச் செலவாக மேற்கொள்ள முடியும். இதில் 0.5% த்தினை மாவட்ட செயலகத்திற்கும் எஞ்சிய 1.5% பிரதேச செயலகத்திற்கும் பிரிந்து செல்கின்ற பிரகாரம் நிருவாகச் செலவினை மேற்கொள்ள முடியும்.

2. இச்சுற்றறிக்கை தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்பட்டால் தொலைபேசி இலக்கங்களான 011-2873801 / 011-2869824 / 011-2872283 மூலமாகவோ அல்லது divinegumala@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரியூடாக சமூக வலுவூட்டல் மற்றும் கிராமிய அபிவிருத்திப் பிரிவினை தொடர்பு கொள்ளவும்.

நீல் பண்டார ஹப்புஹின்ன
பணிப்பாளர் தலைமையதிபதி

**பிரதிகள் :-**

1. சமூக வலுவூட்டல்கள் மற்றும் நலனோம்புகை கௌரவ அமைச்சர் திரு.எஸ்.பி. திஸாநாயக்க அவர்கள் - த.கூ.க. பொருட்டு
2. சமூக வலுவூட்டல்கள் மற்றும் நலனோம்புகை கௌரவ பிரதி அமைச்சர் திரு.ரஞ்சன் ராமநாயக்க அவர்கள் - த.கூ.க. பொருட்டு
3. சகல மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர்கள் - த.கூ.க. பொருட்டு
4. சகல பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள் - த.கூ.க. பொருட்டு
5. செயலாளர் - சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு - த.கூ.க. பொருட்டு
6. மேலதிக செயலாளர் (கிராமிய அபிவிருத்தி / வாழ்வின் எழுச்சி) சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு - த.கூ.க. பொருட்டு
7. சகல பிரதேச செயலாளர்கள் - த.கூ.க. பொருட்டு, உ.ந. பொருட்டும்
8. கணக்காய்வுத் தலைமையதிபதி, கணக்காய்வுத் தலைமையதிபதி திணைக்களம் - த.கூ.க. பொருட்டு
9. பிரதம கணக்காளர், வா.எ.அ.திணைக்களம் - த.கூ.க. பொருட்டு, உ.ந. பொருட்டும்
10. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் - வா.எ.அ.திணைக்களம் - த.கூ.க. பொருட்டு
11. சகல பிரதேச செயலாளர்கள் - த.கூ.க. பொருட்டு, உ.ந. பொருட்டும்
12. சகல வாழ்வின் எழுச்சி தலைமையக முகாமையாளர்கள் - உ.ந. பொருட்டும் மற்றும் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர் மற்றும் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை விளக்கமளிக்கும் பொருட்டும்.